# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 55/2023

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04ம் நாள் புதன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி. பிரீத்திகா | | |
| த/பெ. | ஜவஹர்லல் | வட்டம் | சென்னை |
| கிராமம் | அமைந்தகரை | வயது | 27 |
| தொழில் | சட்ட அலுவலர், மாக்மா எச்.டி.ஐ ஜெனரல் இன்சூரன்ஸ் | மாவட்டம் | சென்னை |

## முதல் விசாரணை

1. நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சட்ட அலுவலராக பணிபுரிகிறேன். நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

## <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ 1 | அதிகார கடிதம் அசல் |
| எ.ம.சா.ஆ 2 | காப்பீட்டு நகல் |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை ஏற்படுத்திய வாகனம் மோட்டார் சைக்கிள் என்றால் சரிதான். மோட்டார் சைக்கிளின் ஓட்டுநரிடம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில்தான் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மனுதாரர் விபத்தின் போது சாலையில் நடந்து சென்றார் என்றால் சரிதான். மனுதாரர் அவரது வயது குறித்து ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிள் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி